மேட்டூர் அணைத் தண்ணீர்.

*குறுகிய கால வினா எண். 30.— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூர் அணை கடந்த பிப்ரவரி மாதம் 28-ந் தேதி மூடப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் மாயூரம் போன்ற பகுதிகளுக்கு நஞ்சை நிலங்களுக்கு தற்போது பாசனத்திற்குத் தேவைப்படும் தண்ணீரை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இயலாது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு என்னுடைய இரண்டு துணைக் கேள்விகளையும் ஒன்றாகவே சேர்த்துக் கேட்டுவிட விரும்புகிறேன். மேட்டூர் அணை பிப்ரவரி 28 ஆம் தேதி மூடப்பட்டிருக்கிறது. கல்லணை மார்ச் 3 ஆம் தேதி மூடப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தண்ணீர் தேவையானால் தண்ணீர் திறந்துவிடப்படும் என்றும், அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும் என்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையிலேயே அறிவித்தார்கள். சேத்தூர், மேலாநல்லூர், திருப்பத்தூர், கன்னியாகுடி ஆகிய இடங்களில் ஐ.ஆர். 20 நெல் பயிர் தண்ணீர் இல்லாமல் 15 நாட்களாக வாடுகின்றன. சமயத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் கதிர் கருக்காயாகிவிடும் என்று விவசாயிகள் அஞ்சுகிறார்கள். ஆகவே, அதை உத்தேசித்து உடனடியாக தண்ணீர் விடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

காவேரி விக்ரமன் சேத்தூருக்கு கல்லணையிலிருந்து வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டுவந்து, அங்கே தலைதாழ்ந்து கொண்டிருக்கும் தாளடிப் பயிரைக் காப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட வேண்டிய தண்ணீர் ஜூலை 5 ஆம் தேதி திறந்து, விடப்பட்டது. ஜூன் மாதம் 28 ஆம் தேதி மூடப்படவேண்டியது இந்த ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதி மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, கால அளவைக் கொண்டு அது செய்யப்படுகிறது என்றாலும், விவசாயத் துறையும் பாசனத் துறையும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுத்து பிப்ரவரி 25 ஆம் தேதி தண்ணீர் கொடுத்தால் போதும் என்று கணக்கு வைத்து, அந்த அடிப்படையிலேதான் மேட்டூர் அணை மூடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல் 28 ஆம் தேதிக்குப் பின்னால் தண்ணீர் தேவைப்பட்டால் அது பரிசீலிக்கப்படும் என்று நானே சொன்னேன், இல்லை என்று சொல்லவில்லை. விவசாயத் துறையும், பாசனத் துறையும் பொறியாளரும், ஆட்சியாளரும் கலந்து பேசினார்கள். அவர்கள் கலந்து பேசியதற்குப் பின்னால் தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தண்ணீர் திறந்து விடப்படுமானால் மீண்டும் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் தேவைப்படலாம். ஆகவே, மீண்டும் தண்ணீர் திறந்து விட முடியாத நிலை இருக்கிறது. இப்போது குளோஷர் ஆரம்பமாகி விட்டது. வேலைகள் அங்கே நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, அந்த வாய்க்காலிலே தண்ணீர் விட முடியாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, மேட்டூர் அணை மூடுவது சம்பந்தமாக சென்ற ஆண்டினுடைய நிலைமையைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் ஆயில் எஞ்சினை வைத்து இறைக்கலாம் என்றாலும் டீசல் கிடைக்கவில்லை, மின்சாரமும் கிடைக்கவில்லை, அங்கே பயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன, அவைகளை காவந்து செய்ய வேண்டியது அரசுடைய கடமை. இந்த நிலையில் மேலும் தண்ணீர் விடுவதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இட் இஸ். ஹை டைம். 28 ஆம் தேதியே மூடப்பட்டிருக்கிறது. மீண்டும் திறந்து விட்டால் இப்போது நடந்துகொண்டிருக்கிற வேலைகள் பாதியிலேயே நின்றுவிடும். அது மட்டுமல்ல, இப்போது திறந்து விட்டால் உடனடியாக தண்ணீர் வயலுக்கு வந்து விடும் என்று சொல்ல முடியாது. இட் வில் டேக் அட்லீஸ்ட் எ வீக் ஆர் செவன் டேஸ், தண்ணீர் வயலுக்கு வருவதற்கு குறைந்தது 7 நாட்களாவது ஆகும். அது மட்டுமல்ல, அந்த 7 நாட்களில் வீணாகிற தண்ணீரை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.